செய்தி வெளியீட்டு எண்.169 நாள்.25.03.2017

**திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு வட்டம், வட்டாட்சியர் அலுவலகத்தில் இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் ஓய்வூதியம், உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் திருமண உதவித்தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகை, புதிய குடும்ப அட்டைகள் மற்றும் இருளர் இனச்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கோ.அரி, மற்றும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.எம்.நரசிம்மன் ஆகியோர் 344 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.இரண்டு இலட்சத்தி மூன்றாயிரத்திற்க்கான நலதிட்டங்களை வழங்கினார்கள்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு வட்டம், வட்டாட்சியர் அலுவலகத்தில் இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் ஓய்வூதியம், உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் திருமண உதவித்தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகை, புதிய குடும்ப அட்டைகள் மற்றும் இருளர் இனச்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கோ.அரி, மற்றும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.எம்.நரசிம்மன் ஆகியோர் 344 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.இரண்டு இலட்சத்தி மூன்றாயிரத்திற்க்கான நலதிட்டங்களை இன்று (25.03.2017) வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் 150 நபர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா, 50 புதிய குடும்ப அட்டைகள், 30 நகல் அட்டைகள், 44 இருளர் இன சாதிச்சான்றிதழ், 51 நபர்களுக்கு முதியோர் உதவிதொகை, உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 6 நபர்களுக்கு திருமண உதவித்தொகை (மொத்தம் ரூ.48,000), 11 நபர்களுக்கு இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை (மொத்தம் ரூ.1,15,000), 2 பயனாளிகளுக்கு நலிந்தோர் உதவித்தொகை (மொத்தம் ரூ.40,000) என மொத்தம் 344 நபர்களுக்கு ரூபாய். 2 இலட்சத்தி 03 முன்றாயிரத்திற்க்கான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் கூறியதாவது “தமிழக அரசு பல்வேறு நலதிட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதில் குறிப்பாக உழவர் பாதுகாப்பு திட்டம் அனைத்து விவசாயிகளுக்கும் திருமண உதவிதொகை, கல்வி உதவிதொகை, இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவிதொகை மற்றும் விபத்து நிவாரண உதவிதொகை ஆகியவை வழங்கப்படுகிறது. இதனை அனைத்து விவசாயிகளும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பள்ளிப்பட்டு வட்டத்தை சேர்ந்த மக்களுக்கு வீட்டு மனை பட்டாக்கள் அரசின் சார்பாக இலவசமாக வழங்கப்படுகிறது. இதனை நடத்திய வருவாய் துறையை சேர்ந்த அலுவலர்கள் அனைவருக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். பட்டா பெற்றவர்களுக்கு வீடு கட்டிக்கொள்வதற்க்காக மத்திய அரசின் மூலமாக ஒவ்வொருவருக்கும் ரூ.ஒரு லட்சத்தி 70 ஆயிரத்திற்கான கடனுதவிகள் வழங்கப்படுகிறது. வட்டார வளர்ச்சி அலுவலர் மூலமாக வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் கண்டறியப்பட்டு அவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

குடிநீர் தட்டுப்பாடு குறித்து புகார்களை தெரிவிக்க 1077 என்ற எண்ணை தொடர்பு கொண்டு மாவட்ட ஆட்சியரகத்தில் செயல்பட்டு வரும் கட்டுப்பாட்டு அறையில் புகார்களை தெரிவிக்கலாம். மக்கள் அனைவரும் தண்ணீர் பயன்பாட்டினை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். மழை பெய்யாத காரணத்தினால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகி உள்ளது. எனவே அனைவரும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். சீமை கருவேல மரங்களை அகற்ற அரசு உத்தரவிட்டதை தொடர்ந்து அரசு மற்றும் தனியார் நிலங்களில் உள்ள சீமை கருவேல மரங்கள் அகற்றப்பட்டு வருகிறது. பொது மக்கள் அனைவரும் சீமை கருவேல மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் திருவள்ளூர் மாவட்டத்தில் 9 மாதம் முதல் 15 வயது உள்ளவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. இந்த தடுப்பூசி மூலம் தட்டமை மற்றும் மணல்வாரி அம்மை நோய்கள் ஆகியவை தடுக்கப்படும். மாவட்டத்தில் 5,60,704 குழந்தைகளுக்கு தடுப்பூசி போட திட்டமிடப்பட்டு 95 சதவிகித குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இந்த தடுப்பூசியினால் குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு 30 வகையான நோய்கள் முற்றிலுமாக தவிர்க்கப்படும். எனவே பெற்றோர்கள் அனைவரும் தங்கள் குழந்தைகளுக்கு தடுப்பூசி போட வேண்டும்” என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் திரு.கு.விமல்ராஜ், திருவள்ளுர்-காஞ்சிபுரம் ஆவின் கூட்டுறவு சங்க தலைவர் திரு.வேலஞ்சேரி சந்திரன், பள்ளிப்பட்டு வட்டாட்சியர் திரு.கோ.வெங்கடேசன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.
~~~~~